**<u>ஒட்டன்சத்திரம் நகராட்சி</u>**

*மதுரை மண்டலம், ஒட்டன்சத்திரம் நகராட்சியில் அரசாணை(நிலை) எண். 83 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை(தேர்தல்) நாள்.28.06.2019–ன்படி 1920–ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் விதி 375 B–ன் கீழ் அவசரக் கூட்டம் நாள்.22.06.2020 (திங்கள் கிழமை) அன்று மாலை 4.00 மணியளவில் நடைபெறவுள்ளது.*

*நகராட்சி அலுவலகம்*
*நாள்: 22.06.2020*

*தனி அலுவலர் மற்றும்*
*ஆணையாளர்*
*ஒட்டன்சத்திரம் நகராட்சி*

**பொருள் : 1**

மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.2814/அ3/2018, நாள்.22.11.2019–ல் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 4 அங்கன்வாடி மையங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீர் செய்து தரம் உயர்த்துவதற்கு மைங்களில் சிறிய மற்றும் பெரிய பழுதுகளை சரி செய்ய மையம் ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வீதம் ரூ.8.00 இலட்சத்திற்கான மதிப்பீடு கோரப்பட்டதை தொடர்ந்து, இந்நகராட்சி பொறியாளரால் 4 மையங்களுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.8.70 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு, 03.012.2019–ம் நாள் சமர்பிக்கப்பட்டதை தொடர்ந்து, மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.2814/அ3/2018, நாள்.04.06.2020–ல் ரூ. 8.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளித்தும் 4 மையங்களில் பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கி உத்தரவு வரப்பெற்றள்ள நிலையில், தும்மிச்சம்பட்டி–1, சத்தியா நகர் அங்கன்வாடி மைய பழுதுநீக்கப் பணிக்கான கூடுதல் மதிப்பீட்டுத் தொகை ரூ.0.70 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. கட்டிட பாதுகாப்பு மற்றும் குழந்தைகளின் நலன் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி செலவினத்தை கல்வி நிதி / நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(1842/2019/இ1)**

**தீர்மானம் எண் – 139**

**பொருள் : 2**

ஒட்டன்சத்திரம் நகராட்சியில் கடந்த மூன்றாண்டு தமிழக அரசின் சாதனைகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர், திண்டுக்கல் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.11/செமதொ/2020 நாள்.11.02.2020–ன் பேரில் தினகரன் தினசரி நாளிதளில் வெளியீடு செய்தமைக்காக, மேற்படி நாளிதழ் நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.23,100/– மட்டும் கேட்டு வரப்பெற்ற பட்டியல் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி விளம்பர செலவின தொகையினை தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 140**

**பொருள் : 3**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2018–2019–ம் நிதி ஆண்டின் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் முழுமையாக டைப் செய்து, ஜெராக்ஸ், பைண்டிங் செய்த வகையில் ஸ்ரீ குமரன் ஜெராக்ஸ் மற்றும் பிரிண்டர்ஸ், பழனி நிறுவனத்திடமிருந்து தொகை ரூ.15,100/– மட்டும் கேட்டு வரப்பெற்ற பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. அனுமதிக்கலாம் .
2. மேற்படி தணிக்கை ஆண்டுக் கணக்குகள் ஸ்ரீ குமரன் ஜெராக்ஸ் மற்றும் பிரிண்டர்ஸ், பழனி நிறுவனத்தின் திரு.வி.காளிமுத்து என்பவர் பெயரில் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மானம் எண் – 141**

**பொருள் : 4**

மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.2814/அ3/2018, நாள்.04.06.2020—ல் நாகணம்பட்டி பகுதியில் உள்ள அங்கன்வாடி நாகணம்பட்டி—1 மையத்தினை தரம் உயர்த்துவதற்கு சிறிய மற்றும் பெரிய பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு நாள்.17.06.2020—ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.05 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு. ஹச்.முகமது ரஸ்மி | 3.59 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரா்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி வ.எண்.1—ல் உள்ள ஒப்பந்ததாரா் திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவா் மதிப்பீட்டு விலையில் 0.05 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம். (ந.க.எண். 1842/2019/இ1)

**தீர்மானம் எண் – 142**

**பொருள் : 5**

மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.2814/அ3/2018, நாள்.04.06.2020—ல் பழைய ஒட்டன்சத்திரம் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தினை தரம் உயர்த்துவதற்கு சிறிய மற்றும் பெரிய பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு நாள்.17.06.2020—ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரா் பெயா் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு. ஹச்.முகமது ரஸ்மி | 2.87 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரா்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி வ.எண்.1—ல் உள்ள ஒப்பந்ததாரா் திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவா் மதிப்பீட்டு விலையில் 0.04 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் 0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம். (ந.க.எண். 1842/2019/இ1)

**தீர்மானம் எண் – 143**

**பொருள் : 6**

மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.2814/அ3/2018, நாள்.04.06.2020–ல் தும்மிச்சம்பட்டி 1–சத்யா நகர் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தினை தரம் உயர்த்துவதற்கு சிறிய மற்றும் பெரிய பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.70 இலட்சத்தில் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மட்டும் நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து கூடுதல் மதிப்பீட்டு தொகை ரூ.0.70 இலட்சத்திற்கு தனி அலுவலர் அவர்களால் 04.06.2020–ம் நாள் முன்அனுமதி வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 17.06.2020–ம் நாளில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.05 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு. ஹச்.முகமது ரஸ்மி | 4.01 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி வ.எண்.1–ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவர் மதிப்பீட்டு விலையில் 0.05 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.முத்துக்கண்ணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம். (ந.க.எண். 1842/2019/இ1)

**தீர்மானம் எண் – 144**

**பொருள் : 7**

மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், திண்டுக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.2814/அ3/2018, நாள்.04.06.2020–ல் காந்தி நகர் பகுதியில் உள்ள காந்தி நகர்–1 அங்கன்வாடி மையத்தினை தரம் உயர்த்துவதற்கு சிறிய மற்றும் பெரிய பழுதுகளை சரி செய்யும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு நாள்.17.06.2020–ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.எம்.முத்துக்கண்ணன் | 0.04 % மதிப்பீட்டு விலையில் குறைவு |
| 2 | திரு. ஹச்.முகமது ரஸ்மி | 2.94 % மதிப்பீட்டு விலையில் கூடுதல் |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் இரண்டு ஒப்பந்ததாரர்களிடமிருந்தும் டேவணித்தொகை வரப்பெற்ற நிலையில், மேற்படி வ.எண்.1–ல் உள்ள ஒப்பந்ததாரர் திரு.எம்.முத்துக்கண்ணன் என்பவர் மதிப்பீட்டு விலையில் 0.04 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கு

**அலுவலக குறிப்பு:**

1. அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் 0.04% மதிப்பீட்டு விலை விகிதத்தில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எம்.முத்துக்கணன் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அனுமதிக்கலாம். (ந.க.எண். 1842/2019/இ1)

**தீர்மானம் எண் – 145**

**பொருள் : 8**

ஒட்டன்சத்திரம் நகராட்சி பகுதியில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சித் திட்டம் IUDM–2020–21–ன் கீழ் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள, இந்நகராட்சி பகுதிகளில் சேதமடைந்த சாலைகள் மற்றும் வடிகால்களை சீரமைத்திட கீழ்க்காணும் பணிகள் தேர்வு செய்து தயார் செய்யப்பட்ட திட்ட மதிப்பீடு மன்றத்தின் அனுமதிக்கு.

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீடுகள் (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|
| | சிப்பம் – 1 | |
| 1. | திண்டுக்கல் பழனி மெயின் சாலை முதல் நல்லாகவுண்டன் நகர் ஓடை வரை தார்சாலை மற்றும் தடுப்புச்சுவர்அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.200.00 |
| | சிப்பம் – 2 | |
| 2. | கைராசி நகர், சீத்தப்பட்டி மற்றும் திடீர் நகர் பகுதிகளில் தார்ச்சாலை, மழைநீர் வடிகால் மற்றும் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.200.00 |
| | சிப்பம் – 3 | |
| 3 | நாகணம்பட்டி குறுக்கு சாலை, ஐஸ்வர்யா நகர் மற்றும் பேருந்து நிலையத்தில் தார்ச்சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளுதல். | ரூ.130.00 |
| | **மொத்தம்** | **ரூ.530.00** |

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்ட மதிப்பீட்டு தொகை ரூ.530.00 இலட்சத்தினை நகராட்சியின் நிதி நிலையினை கருதி, மேற்படி திட்டத்தில் முழு மான்யமாக வழங்க கோரியும், அதற்கான நிர்வாக அனுமதி வழங்க கோரியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 146**

**பொருள் : 9**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 3 வது வார்டு பகுதியில் கழிவு நீர் செல்லாமல் தேங்கி நின்று துர்நாற்றம் அடிக்கிறது. மேற்படி கழிவு நீர் அப்புறப்படுத்த புதிதாக கழிவுநீர் வடிகால் நாகணம்பட்டி சாலை குமரன் நகர் முதல் துல்கருனை, சிக்கந்தர் நகர் வரை அமைக்கவும் மற்றும் அண்ணா நகர் பகுதியில் கழிவுநீர் வாய்க்கால் அமைக்கவும் நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.9.50 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. மேற்படி பொதுமக்களின் நலன் கருதி, தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று, ஒப்பந்தப்புள்ளி கோரவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 147**

**<u>பொருள் : 10</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள தெரு விளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள பயன்படும் தள்ளுவண்டியுடன் கூடிய ஏணி 4 வண்டி Wheel புதிதாக மாற்றம் செய்தல் அதை ஏணியுடன் இணைத்து பழுதான Rope முழுவதுமாக மாற்றம் செய்து 4 எண்ணம் Jockey புதியது பொருத்தி மராமத்து பணிகள் மேற்கொள்ளவும், பணி நடைபெறும் பொழுது 4 திசைகளிலும் வாகன எச்சரிக்கை தடுப்பு வைக்கவும் உபகரணம் செய்து கொடுக்கும் பணிகள் மேற்கொள்ள நாள்.20.03.2020–ல் தனிஅலுவலர் அவர்கள் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து, மேற்டி பணி மேற்கொள்ள நாள்.22.06.2020–ல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு,

| வ.எண் | பொருள் | எண்ணம் | ஹச்.எம்.ஆர். கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் ரூ. | பால எலக்ரானிக், ஒட்டன்சத்திரம் ரூ. | விஜயா எலக்டிரிக்கல், ஒட்டன்சத்திரம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | Electrical Ladder Wheel | 1 | 2500 | 2800 | 2700 |
| 2 | Fixing of New Ladder Joints Material | 1 | 5000 | 5250 | 5200 |
| 3 | Robe Wire Change | 1 | 2000 | 2150 | 2100 |
| 4 | Safety Diversion PVC cons | 1 | 1200 | 1350 | 1300 |
| 5 | Leader jockey | 1 | 2000 | 2200 | 2150 |
| 6 | Ladder Painting Material | 1 | 4000 | 5250 | 4300 |
| 7 | Labour Charges | 1 | 5000 | 5300 | 5200 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக வரப்பெற்றுள்ளது மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்கு ஹச்.எம்.ஆர்.கன்ஸ்ட்ரக்சன், ஒட்டன்சத்திரம் நிறுவனத்திற்கு தனி அலுவலர் அவர்கள் முன் அனுமதி பெற்று உத்திரவு வழங்கி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 148</u>**

**<u>பொருள் : 11</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சிக்கு சொந்தமான காந்தி தினசரி காய்கறி மார்க்கெட் திண்டுக்கல் பழனி தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்று வருகிறது. கோவிட்–19 கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கையாக சமூக இடைவெளி கடைபிடிக்கும் வகையில் ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து காந்தி மார்க்கெட் மற்றும் பேருந்து நிலையத்தில் செயல்பட்டு வந்தது. இரண்டாம் கட்ட ஊரடங்கு 17.05.202020–ல் முடிவுற்று 18.05.2020–ம் நாள் முதல் பேருந்துகள் இயங்குவதற்கான வாய்புகள் உள்ளதால், பேருந்து நிலையத்தில் நடைபெறும் காய்கறி சந்தையினை மாற்று இடம் தேர்வு செய்து நடத்த பார்வை 1–ல் காணும் நாளில் திண்டுக்கல் மாவட்ட கொரோனா நோய் கண்காணிப்பு அலுவலர் அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை ஆகியோர்களின் அறிவுரைக்கிணங்க, பழனி சாலை புல எண். 655/2 654/1, 655/1ஏ மற்றும் 621ஏ/4பி–ல் ஏக்கர் 2 சென்ட் 86 உள்ள நிலத்தில் புதியதாக தற்காலிக காந்தி மார்க்கெட் நிலக் குத்தகை ஏதுமின்றி அமைத்துக்கொள்ள தனியர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, பார்வை 4–ல் காணும் நாளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களால் நேராய்வு செய்து இடம் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் தற்காலிக காந்தி மார்க்கெட் நடைபெற ஏதுவாக மின் விளக்குகள், கடைகளுக்கான செட், கனரக வாகனங்கள் செல்ல ஏதுவாக கிராவல் மற்றும் இதர பணிகள் கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை பணியாக 1920 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் அவசரப்பணியாக மேற்கொள்ளப்பட்ட கீழ்க்காணும் செலவினப் பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு.

| வ. எண் | செலுத்துசீட்டு எண்/நாள் | விபரம் | தொகை |
|---|---|---|---|
| 1 | 120, 121, 122, 123/ 02.06.2020 | மின் கம்பங்கள், விளக்குகள் மற்றும் பசுமை வலை | 663426 |
| 2 | 150/09.06.2020 | கிராவல் மண் பரத்துதல் பணி | 641845 |
| 3 | 163/17.06.2020 | பணியாளர்களுக்கான அடையாள அட்டைகள்பணி | 9700 |
| 4 | 169/22.06.2020 | 6.10மீ நீளம், 4.90மீ அகலத்தில் 15 கடைகள் அமைத்தமைக்கு ஓராண்டு வாடகை | 675000 |

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையாக மண்டல மற்றும் மாவட்ட உயர் அலுவலர்களின் அறிவுரைக்கிணங்க புதியதாக மாற்றிடத்தில் காந்தி மார்க்கெட் நடத்த தேர்வு செய்யப்பட்ட இடத்தில் மேற்காணும் பட்டியலில் உள்ள பணிகளுக்காக வழங்கப்பட்ட தொகையினை 1920 தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் வழங்கிய செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 149</u>**

**<u>பொருள் : 12</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 2, 3 மற்றும் 4 வது வார்டு பகுதியில் உள்ள பூங்கா இடங்களில் மரக்கன்றுகள், பூச்செடிகள் மற்றும் மக்கள் அமர்ந்துசெல்ல ஏதுவாக இருக்கை வசதி செய்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பூங்காக்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.5.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் கருதி, பூங்காக்களை மேம்படுத்தி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 150</u>**

**<u>பொருள் : 13</u>**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 8 மற்றும் 9 வது வார்டு பகுதியில் உள்ள பூங்கா இடங்களில் மரக்கன்றுகள், பூச்செடிகள் மற்றும் மக்கள் அமர்ந்துசெல்ல ஏதுவாக இருக்கை வசதி செய்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பூங்காக்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு :</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் கருதி, பூங்காக்களை மேம்படுத்தி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் – 151</u>**

**பொருள் : 14**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 12, 17 மற்றும் 18 வது வார்டு பகுதியில் உள்ள பூங்கா இடங்களில் மரக்கன்றுகள், பூச்செடிகள் மற்றும் மக்கள் அமர்ந்துசெல்ல ஏதுவாக இருக்கை வசதி செய்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பூங்காக்களை அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் கருதி, பூங்காக்களை மேம்படுத்தி பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அபிவிருத்தி செய்யும் பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 152**

**பொருள் : 15**

ஒட்டன்சத்திரம் நகராட்சி 6 மற்றும் 7 வார்டுகளில் மேற்கு தொடர்சிச மலையிலிருந்து வரும் வெள்ளநீர் வழிந்தோடும் வகையில் அமைந்துள்ள மூன்று ஓடைகளில் அடைப்புகள் ஏற்பட்டு தூர்ந்துபோய் உள்ளதால், எதிர்வரும் மழைக்காலங்களில் விஸ்வநாத நகர், சாஸ்தா நகர் மற்றும் தோட்டத்துச்சாலை விவசாய நிலப் பகுதியில் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளதால், மேற்படி ஓடைகளை தூர்வாரி மழைநீர் தேங்காதவாறு பணிகள் மேற்கொள்ள நகராட்சி பொறியாளரால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.6.00 இலட்சம் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்.
2. பொதுமக்களின் நலன் கருதி, மேற்படி பணிகள் மேற்கொள்ள விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண் – 153**

**பொருள் :16**

ஒட்டன்சத்திரம் நகராட்சி ஆணையாரால் 2020–21 ஆண்டுக்கான 16.05.2020 முதல் 22.06.2020 முடிய பட்டுவாடா செய்யப்பட்ட செலவு சீட்டு எண் RF0084 முதல் RF0173 முடிய, WS0010 முதல் WS0023 முடிய மற்றும் TFV010 முதல் TFV016 முடிய தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கும், பதிவுக்கும்.

**தீர்மானம் எண் – 154**